மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்

தஞ்சாவூர் மாவட்டம்

கூட்டுறவுச்சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம்,
கூட்டுறவு அலுவலக வளாகம், மருத்துவக்கல்லூரி சாலை, தஞ்சாவூர்–7.

விளம்பர எண். 1/2020 மா.ஆ.நி

நாள்: 10.01.2020

தஞ்சாவூர் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிகளில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் மற்றும் ஓட்டுநர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்காக இந்திய குடியரிமையுடைய, கீழ்காணும் தகுதிபெற்ற ஆண்/பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 10.02.2020 மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி

வ. எண்	நேரடி நியமன பதவி விவரம்	சம்பள விகிதம்	கூட்டுறவு நிறுவனத்தின் பெயர்	காலிப்பணியிட எண்ணிக்கை
1.	அலுவலக உதவியாளர் (Office Assistant)	ரூ.10500–750/1–11250–800/8–17650–1000/14–31650 (1+23 Stages)	தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி.	26
2	ஓட்டுநர் (Driver)	ரூ.11250–750/4–14250–850/4–17650–950/2–19550–1000/8–27550–1075/3–30775–1150/2–33075 (1+23 Stages)	தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி.	5

மேற்படி காலிப்பணியிடங்களுக்கான வகுப்புவாரி ஒதுக்கீடு

பதவி	மொத்த காலிப் பணியிடம்	வகுப்புவாரி ஒதுக்கீடு						
		பொதுப் போட்டி (GT)	பிற்படுத்தப் பட்டோர் (BC)	பிற்படுத்தப் பட்டோர் (முஸ்லிம்) (BCM)	மிகவும் பிற்படுத்தப் பட்டோர் / சீர்மரபினர் (MBC/DNC)	ஆதி திராவிடர் (SC)	ஆதி திராவிடர் அருந்ததியர் (SC(A))	பழங்குடியினர் (ST)
அலுவலக உதவியாளர்	26	7	7	1	5	5	1	–
ஓட்டுநர்	5	2	1	–	1	–	1	–

கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி

வ. எண்	நேரடி நியமன பதவி விவரம்	சம்பள விகிதம்	கூட்டுறவு நிறுவனத்தின் பெயர்	காலிப்பணியிட எண்ணிக்கை
1.	அலுவலக உதவியாளர் (Office Assistant)	ரூ.10500–750/1–11250–800/8–17650–1000/14–31650 (1+23 Stages)	கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி.	37
2	ஓட்டுநர் (Driver)	ரூ.11250–750/4–14250–850/4–17650–950/2–19550–1000/8–27550–1075/3–30775–1150/2–33075 (1+23 Stages)	கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி.	3

மேற்படி காலிப்பணியிடங்களுக்கான வகுப்புவாரி ஒதுக்கீடு

பதவி	மொத்த காலிப் பணியிடம்	வகுப்புவாரி ஒதுக்கீடு						
		பொதுப் போட்டி (GT)	பிற்படுத்தப் பட்டோர் (BC)	பிற்படுத்தப் பட்டோர் (முஸ்லிம்) (BCM)	மிகவும் பிற்படுத்தப் பட்டோர் / சீர்மரபினர் (MBC/DNC)	ஆதி திராவிடர் (SC)	ஆதி திராவிடர் அருந்ததியர் (SC(A))	பழங்குடியினர் (ST)
அலுவலக உதவியாளர்	37	11	9	1	8	6	2	–
ஓட்டுநர்	3	1	–	–	1	–	1	–

நிபந்தனைகள்:

1. மேற்படி பதவிகளுக்கான நேரடி நியமனத்தின் போது அரசுப்பணியாளர்கள் தேர்வுக்குப் பின்பற்றப்படும் வகுப்பு வாரி சுழற்சி முறை ஒட்டுமொத்த நியமனத்திற்கும் கீழ்க்கண்டவாறு பின்பற்றப்படும்.
2. நியமனத்தின் போது தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் போதுமான அளவு இல்லாத போது பெண்களுக்கான ஒதுக்கீடு எண்ணிக்கையைத் தகுதிவாய்ந்த அதே வகுப்பினை சார்ந்த ஆண்களைக் கொண்டு நிரப்பப்படும்.
3. ஆதரவற்ற விதவைகள், மாற்றுத்திறனாளிகள் (கண் பார்வைபற்றோர் தவிர) மற்றும் முன்னாள் ராணுவத்தினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016–ன் பிரிவு 26(2) மற்றும் 27–ன்படி இந்த நியமனத்தின்போதும் பின்பற்றப்படும்.
4. மேற்படி பணியிடங்களுக்கான சம்பள விகிதம் மற்றும் இதர படிகள் மேற்குறிப்பிட்ட கூட்டுறவு நிறுவன பணியாளர்களுக்கான பணிநிலைத்தின் குறித்த சிறப்பு துணை விதிகளுக்கு உட்பட்டு அமையும்.
5. தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட கூட்டுறவு நிறுவனத்தின் துணைவிதிகளுக்கு உட்பட்டு பணியாற்ற வேண்டும்.
6. நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ளும்போது கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் தேர்வு நுழைவு சீட்டில் தெரிவிக்கப்படும்.

3. தகுதிகள்:–

அ) வயது (01.01.2020 அன்றுள்ளபடி)

(01.01.2002 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும்.)

வ. எண்	விண்ணப்பதாரர்களின் இனவகைகள்	குறைந்த பட்ச வயது (முடிவடைந்திருக்க வேண்டும்)	அதிகபட்ச வயது
1.	ஆதிதிராவிட வகுப்பினர், ஆதிதிராவிட வகுப்பினர் (அருந்ததியினர்), பழங்குடியின வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தபட்ட வகுப்பினர் (முஸ்லிம்)	18 வயது	வயது வரம்பு இல்லை
2.	ஏனையோர் (OC)	18 வயது	30 வயதுக்குள்

குறிப்பு:

அ) ஆதிதிராவிட வகுப்பினர், ஆதிதிராவிட வகுப்பினர் (அருந்ததியினர்), பழங்குடியின வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் /சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) தவிர ஏனைய வகுப்பினை சார்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் பத்தாண்டு வரை வயது வரம்புச்சலுகை பெற தகுதியுடையவராவர்.

ஆ) ஆதிதிராவிட வகுப்பினர், ஆதிதிராவிட வகுப்பினர் (அருந்ததியினர்) பழங்குடியின வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) தவிர ஏனைய வகுப்பினை சார்ந்த முன்னாள் இராணுவத்தினருக்கு அரசாணையின்படி வயது வரம்பு சலுகை வழங்கப்படும்.

ஆ) கல்வித்தகுதி:

1.	அலுவலக உதவியாளர்	அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
2.	ஓட்டுநர்	1. அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 2. 1939ஆம் ஆண்டு மோட்டார் வாகன சட்டத்தின்படி நாளது தேதியில் செல்லுபடியாகக்கூடிய இலகுரக/கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றவராகவும், 3. நான்கு சக்கர வாகனத்தை ஓட்டுவதில் இரண்டாண்டுகளுக்கு குறையாத அனுபவம் உள்ளவராகவும், 4. வாகனப்பழுதுகளை கையாளுவதில் அடிப்படை அறிவு பெற்றவராக இருக்க வேண்டும்.

விளக்கம்:

அங்கீகரிக்கப்பட்ட பள்ளி என்பது தமிழ்நாடு அரசால் நிர்வகிக்கப்படும் அல்லது தமிழ்நாடு அரசின் அங்கீகாரம் பெற்றது அல்லது மாநில கல்வி விதிகளின்கீழ் பள்ளி கல்வித்துறையால் அங்கீகரித்து அனுமதி வழங்கப்பட்டவை.

தமிழ்மொழியில் தகுதி:–

விண்ணப்பத்தாரர்கள் இந்த அறிவிப்பு வெளியிடும் நாள் அன்று தமிழ் மொழியில் எழுத, படிக்க போதுமான திறன் அறிவு பெற்றிருக்க வேண்டும்.

4) உடற்தகுதிச்சான்றிதழ்:–

மேற்படி பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பக்தார்கள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் உரிய மருத்துவர் நிலைக்கு குறையாத மருத்துவரிடம் பெற்ற உடற்தகுதிச்சான்றிதழினைச் சமர்ப்பிக்க வேண்டும். தகுதிபெற்ற கண் மருத்துவரிடம் பெறப்பட்ட சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய உடல் ஊனம் மேற்படி பதவிகளுக்கான பணியினைச் செய்வதற்கு தடையாக இருக்காது என்பது குறித்து மருத்துவ குழுமத்திடமிருந்து பெறப்பெற்ற சான்றிதழினையும் சமர்ப்பிக்க வேண்டும்.

5) தெரிவு செய்யும் முறை:–

அ) மேற்படி காலிப்பணியிடங்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், முன்னாள் இராணுவத்தினர் அலுவலகம் மூலம் பெறப்படும் பட்டியல் மற்றும் இவ்விளம்பரம் மூலம் பெறப்படும் தகுதியான விண்ணப்பங்கள் ஆகியவற்றிற்கு நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு அதன் அடிப்படையில் நிரப்பப்படும்.

ஆ) விண்ணப்பத்தாரர்கள் நேர்முகத்தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப்பட்டியல் தயாரிக்கப்பட்டு, இடஒதுக்கீடு மற்றும் இனசுழற்சி முறை ஆகியவை பின்பற்றப்பட்டு காலிப்பணியிடங்களின் எண்ணிக்கைக்கு உட்பட்டு பணியிடத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

இ) நேர்முகத்தேர்வுக்கு அழைப்புக்கடிதம் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். நேர்முகத்தேர்விற்கு அழைப்புக் கடிதத்தில் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் விண்ணப்பதாரர்கள், அவர்களுடைய அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் அவற்றின் சான்றிட்ட நகல் ஒன்றுடன் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

ஈ) நேர்முகத்தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் எந்த நிலையிலும், இது தொடர்பாக எந்த உரிமையும் கோர இயலாது. நேர்முகத்தேர்வு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து பணி நியமனம் கோர உரிமை கிடையாது.

உ) நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு பயணப்படி ஏதும் வழங்கப்பட மாட்டாது.

ஊ) தஞ்சாவூர் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தால் மேற்குறிப்பிட்ட பணியிடத்தில் தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு பணி ஒதுக்கீடு ஆணை (Allotment Order) வழங்கப்படும். பணி ஒதுக்கீடு ஆணை பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு சம்பந்தப்பட்ட கூட்டுறவு நிறுவனத்தின் தகுதி வாய்ந்த அலுவலர், பணியமர்வு ஆணை (Appointment Order) வழங்குவார்.

6) தடையின்மைச் சான்றிதழ்

விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே பணியாற்றுபவர்களாக (நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ) இருக்கும் பட்சத்தில், அவர் பணியாற்றும் அலுவலகத்தில் இருந்து தடையில்லாச் சான்றிதழை நேர்முகத்தேர்வின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

7) விண்ணப்பக்கட்டணம்:–

அ) விண்ணப்பக்கட்டணம் ரூ.150/– (ரூபாய் நூற்று ஐம்பது மட்டும்)

ஆ) விண்ணப்பக்கட்டணம் செலுத்துவதிலிருந்து ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடியின வகுப்பினர் மற்றும் அனைத்து வகுப்பைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு விலக்களிக்கப்படும்.

இ) மேற்படி விண்ணப்பக் கட்டணம், தஞ்சாவூர் / கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையகம் மற்றும் அதன் கிளைகள் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், தஞ்சாவூர் ("DISTRICT RECRUITMENT BUREAU, THANJAVUR") Payable at Thanjavur என்ற பெயரில் குறுக்கு கோடிட்ட வரைவோலையாக (Demand Draft) எடுக்கப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்ட வேண்டும். விண்ணப்படிவத்தின் எண் மற்றும் விண்ணப்பிக்கப்படும் பதவிக்கான பெயர் மற்றும் விண்ணப்பதாரரின் பெயர் ஆகியன வரைவோலையின் பின்புறம் எழுதப்படவேண்டும்.

ஈ) விண்ணப்பக் கட்டணத்திற்கான வரைவோலை இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

உ) ஒருமுறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம், எக்காரணம் கொண்டும் திருப்பி அளிக்கப்பட மாட்டாது.

8) விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கும் இடங்கள் :–

மேற்படி பணியிடத்திற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், விண்ணப்பப் படிவங்களை கீழ்கண்ட இடங்களில் 20.01.2020 முதல் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரத்தில் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

1. தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி லிட்., தலைமையகம், மேலவீதி, தஞ்சாவூர்.
2. தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி பட்டுக்கோட்டை கிளை, சாமு முதலித்தெரு, பட்டுக்கோட்டை.
3. தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி மன்னார்குடி கிளை, பந்தலடி, மன்னார்குடி.
4. கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி தலைமையகம், பெரிய தெரு, கும்பகோணம்.
5. கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி மயிலாடுதுறை மெயின்கிளை, விஜித்ராயர் தெரு, மயிலாடுதுறை.
6. கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி திருவாரூர் மெயின் கிளை, தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணைய வளாகம் (TCMF) திருவாரூர்.
7. கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி நாகப்பட்டினம் மெயின் கிளை, வீரபத்ரசாமி கோவில் தெரு, நாகப்பட்டினம்.
8. கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி வேதாரண்யம் மெயின் கிளை, சீதாலெட்சுமி காம்ப்ளக்ஸ், நாகை ரோடு, வேதாரண்யம்.

9) விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டிய இணைப்புகள்:–

அ) விண்ணப்பதாரர்கள் விண்ணப்படிவத்துடன், கீழ்க்கண்ட சான்றளிக்கப்பட்ட சான்றிதழ்களின் நகல்களை மட்டுமே இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றுகளை அனுப்பக்கூடாது.

1. பிறந்த தேதிக்கான சான்றிதழ்.
2. சாதிச்சான்றிதழ்.
3. கல்வித்தகுதிச்சான்றிதழ்.
4. தமிழ் மொழியில் தகுதி சான்றிதழ்.
5. நன்னடத்தை சான்றிதழ்.
6. கடைசியாக கல்வி பயின்ற நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தைச் சான்றிதழ்
7. உடற்தகுதிச்சான்றிதழ்.
8. மாற்றுத்திறனாளிக்கான சான்றிதழ்.
9. ஆதரவற்ற விதவைக்கான சான்றிதழ்.
10. முன்னாள் படைவீரருக்கான சான்றிதழ்.
11. தடையில்லாச் சான்றிதழ்.
12. தமிழ் வழியில் கல்விப் பயின்றதற்கான சான்றிதழ் (Person studied in Tamil Medium)
13. ஒட்டுநர் பதவிக்கு விண்ணப்பிப்பவரானால், அதற்குரிய சான்றிதழ்கள்.

ஆ) சான்றளிக்கப்பட்ட சான்றிதழ்கள் (Attested copies), இணைக்கப்படாமல் அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

இதர நிபந்தனைகள்

I) நேர்முக தேர்வில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளார் என மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை முழுமையாக பெற்றிருக்கவில்லை என பின்னர் கண்டறியப்பட்டால், அவரது தெரிவு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைத்தால் உடனடியாக ரத்து செய்யப்படும்.

II) மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இத்தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தில் மேல்முறையீடு உரிய காரணங்களுடன் செய்யப்பட வேண்டும். அதற்குப்பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

III) காரணம் எதுவும் தெரிவிக்காமல் இந்த அறிவிக்கையை ரத்து செய்ய / திரும்பப்பெற / திருத்துவதற்கு மற்றும் கெடு தேதியை நீட்டிப்பதற்கு தஞ்சாவூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு முழுஉரிமை உண்டு.

IV) தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிகளின் விவகார எல்லையில் வசிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

10) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பெறுதல்:–

விண்ணப்பத்தாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன்பு கீழ்கண்டவற்றை உறுதி கொள்ள வேண்டும்.

அ) விண்ணப்பப்படிவங்கள், பந்து முனை பேனா (Ball Point Pen) கொண்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆ) விண்ணப்பத்தாரரின் கையொப்பத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில், விண்ணப்பத்தாரர் கட்டாயம் கையொப்பம் செய்தல் வேண்டும்.

இ) விண்ணப்பத்தாரரின் கையொப்பம் இல்லாமல் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஈ) விண்ணப்பப்படிவத்தில் அனைத்து காலங்களும் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

உ) விண்ணப்பப்படிவத்துடன் விண்ணப்ப கட்டணத்திற்கான குறுக்கு கோடிட்ட வரைவோலை தவறாமல் இணைக்கப்பட வேண்டும்.

ஊ) விண்ணப்பத்தாரர் அவரின் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒன்றை விண்ணப்பப்படிவத்தில் ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒட்டப்பட வேண்டும், தனியாக ஒரு புகைப்படத்தினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

எ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சுயமுகவரியிட்ட ரூ.25/–க்கான தபால் வில்லை ஒட்டிய 24x10 செ.மீ. உறையினை இணைத்து அனுப்ப வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு தபால் மூலமோ அல்லது நேரிலோ **10.02.2020 அன்று மாலை 5.45 மணிக்கு** முன்னர் கிடைக்கும்படி அனுப்பிவைக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட நேரத்திற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது.

இணைப்பதிவாளர் / தலைவர்
மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், தஞ்சாவூர் மாவட்டம்.

Scanned by CamScanner